# பத்திரிக்கைச் செய்தி

## கூடுதல் மின் தேவைக்கு மின் இணைப்பு வழங்க ரூ.50,000/- லஞ்சம் கேட்டு பெற்ற உதவி செயற் பொறியாளர்கள் கைது

புகார்தாரர் திரு.சண்முகசுந்தரம், எண்.5, மகிழ்ச்சி நகர், அடுக்குபாறை, வில்லரசம்பட்டி, ஈரோடு மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரரின் மனைவி நடத்தும் குடோனுக்கு கூடுதல் மின் தேவை வேண்டி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மாண கழகம், வீரப்பன் சத்திரம், ஈரோடு மாவட்டத்தில் விண்ணப்பித்திருந்தார். விண்ணபத்தினை பரீசிலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க திரு.சண்முகம், உதவி செயற் பொறியாளர், (Assistant Executive Engineer) தனக்கு லஞ்சமாக ரு.25,000/- கொடுக்க வேண்டும் எனவும் மேலும் தன்னுடைய பிரிவு பொறியாளருக்கு (Divisional Engineer) லஞ்சமாக ரூ.25,000/- கொடுக்க வேண்டும் எனவும் ஆக மொத்தம் ரூ.50,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் எனவும் வற்புறுத்தியுள்ளார். திரு.சண்முகம், உதவி செயற் பொறியாளர் அவருக்கு துணையாக திரு.சிவக்குமார், உதவி பொறியாளர் (Assistant Engineer) செயல்பட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, ஈரோடு பிரிவில் புகார் மனு கொடுத்துள்ளார். இப்புகார் மனு சம்பந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 31.10.2023ம் தேதி பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.சண்முகம், உதவி செயற் பொறியாளர், புகார்தாரரிடமிருந்து லஞ்ச பணமான ரூ.50,000/-யை கேட்டு பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையினரால் கைது செய்யப்பட்டார். மேலும் திரு.சிவக்குமார், உதவி பொறியாளர் அவர்களும் கைது செய்யப்பட்டார்.